முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.03.03.2026

O.S. No.93/2015

பி.வா.சா-1 சண்முகநாதன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது அம்மா ராஜம்மாள் 26.11.2023 ல் இறந்தார். எனது அம்மாவின் இறப்பின் முன்பாவே வேலம்மாளும் சங்கரம்மாளும் பலகாலத்துக்கு முன்பே இறந்து விட்டார்கள் என்றால் சரி. எனது அம்மாவின் அப்பா சுடலையாண்டி 1974 ல் இறந்தார். என் பாட்டி பிரம்மம்மாள் 22.6.2004 ல் இறந்தார். என் தாத்தா பாட்டி இறந்த பிறகு வழக்கு சொத்தை வாக்கரா பாகம் நடந்ததாக இந்த நீதிமன்றத்தில் முதல்முதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. என் பாட்டி பிரம்மம்மாவோ வேலம்மாவோ சங்கரம்மாவோ பாகம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு செய்துள்ளார்களா என்றால் இல்லை.

2013 ம் ஆண்டிற்கு முன்பாக வாக்கராபாகம் நடந்ததாக சொல்லப்படும் விவரத்தை சொல்லி அகஸ்தீஸ்வரம் தாலுகா அலுவலகத்தில் பட்டா மாற்றம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. 2013 க்கு முன்பாக எனது அம்மா பெயரிலோ பெரியம்மா பெயரிலோ பட்டா வரி ரசீதுகள் மாற்றபடவில்லை என்றால் சரி. சொத்து வரி அவர்கள் பெயரில் ஏற்படவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் என் தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அசல் ஆவணங்கள் என் கையில் இல்லாத காரணத்தால் போலியாக தயாரித்த செட்டில்மெண்ட் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.38 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 4 வது பக்கத்தில் சுடலையாண்டிக்கு வழக்கு பட்டிகை சொத்து பாத்தியம் என்றும் அவர் இறந்தபின்பு அவரது மக்களுக்கு கூட்டாக கைவசம் அனுபவத்தில் இருந்ததாகவும் வாக்காரால்பாகம் ஏற்பட்டு 4¼ சென்ட்டில் ½ சென்ட் 20 ச.அடி விற்பனை செய்து மீதி உள்ள சொத்து செட்டில்மெண்ட்

ஏற்படுத்தியதாக சொல்லும் விவரம் பொய் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 39, 40 ஆகிய ஆவணங்களிலும் இதே போன்று தவறான கற்பனையான விவரங்களை சொல்லி விடுதலை ஆவணம் எழுதப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் தெற்கு மற்றும் மேற்கு பக்கம் கண்ணன் சொத்து என்றால் சரியல்ல. தெற்கு பக்கம்கண்ணன் சொத்து மேற்கு பக்கம் யேசுஅடியான் சொத்து உள்ளது. அந்த கண்ணன் தான் வள்ளியூருக்கு வந்து எனக்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று என்னை வற்புறுத்தி வா.சா.ஆ 38 முதல் 40 ஆவணங்களை தயார் செய்ய வைத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு மூல காரணம் கண்ணன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 38,39,40 ல் ராஜம்மாள், வேலம்மாள் , சங்கரம்மாளுக்கு என்னென்ன பாகம் ஏற்படுத்தப்பட்டதென்றால் முழுமையான விவரங்கள் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ 38 முதல் 40 வரையான ஆவணங்களுடன் எழுதி கொடுத்த நபர்களின் பெயர்களில் உள்ள வருவாய் துறை ஆவணங்களோ வேறு ஆவணங்களோ இணைக்கபடவில்லை என்றாலும் மாதிரி வரைபடம் எதுவும் இணைக்கபடவில்லை என்றாலும் சரி. 1ம் வாதி இசக்கி வா.சா.ஆ 38 மு தல் 40 வரையிலான ஆவணங்கள் செல்லாத ஆவணங்கள் என்று வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் வழக்கு சொத்தில் பாகம் கேட்டு நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை. என் எதிர்வழக்குரையில் எதிர்கோருரிமை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரி.

நானும் எனது 2 அண்ணன்களும் சேர்ந்து 15.3.2015 ம்தேதி வழக்கு சொத்தில் குறுக்கு சுவர் கட்ட முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. 1ம் வாதி எங்களை பிடித்து விரட்டி விட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை 5 பங்காக பிரித்ததாக சொல்லியுள்ள விவரம் தவறு. 3 சகோதரிகளுக்கும் திருமணம் செய்து

கொடுத்து பின் 1ம் வாதி திருமணம் செய்தார் என்றால் சரி. 1ம் வாதி திருமண தேதியில் இருந்து வழக்கு சொத்தில் குடும்பமாக குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1981ல் என் அம்மாவிற்கு திருமணம் முடித்தபோது வழக்கு சொத்தின் அரை சென்ட் 20 ச.அடியை விற்று திருமணம் செலவு செய்தார்கள் என்றாலும் அதற்கு அனைவரும் சேர்ந்து கையொப்பம் செய்தார்கள் என்றால் சரி. அது **வா.சா.ஆ 44** ஆகும். அதில் மீதம் சொத்தில் பாத்தியம் உள்ளது என்று குறிப்புள்ளது. அவ்வாறு எந்த விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 44 கிரய பத்திரம் என்பதால் கிரய சொத்து மட்டுமே விவரிக்கப்பட்டிருக்கும் மீதி சொத்து பற்றிய விவரம் இருக்காது என்றால் சரியல்ல. மீதமுள்ள சொத்தில் பங்கு இருப்பதாக என் எதிர்வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரி. எனது அம்மா மற்றும் அவரது சகோதரிகளிடம் இருந்து பணம் வசூலித்து வரி செலுத்தியதாக எனது எதிர்வழக்குரையில் 5வது பாராவில் சொல்லியுள்ளது தவறான விவரம் என்றால் சரியல்ல அதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. சென்னையில் இருந்து 1ம் வாதி இங்கு வந்து வழக்கு சொத்தின் முழு பகுதியிலும் இருப்பதற்கு எங்களிடம் அனுமதி பெற்றதாக சொல்லிய விவரத்திற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரி.

வழக்குசொத்து கூட்டு அனுபவத்தில் சொல்லப்படுவதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரி. 1ம் பிரதி 2 முதல் 4 பிரதிகளுக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாதது என்றால்சரியல்ல. வா.சா.ஆ 38 முதல் 40 வரையுள்ள ஆவணத்தின் மூலம் எங்களுக்கு எந்த உரிமையும் அவகாசமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1,5,9 பிரதிகள் எழுதி கொடுத்த ஆவணங்கள் படி எந்த உரிமையும்

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு ஆவணத்திலும் 671 ச.லிங்க்ஸ் எங்களுக்கு உரிமை ஏற்பட்டதாக சொல்லிய விவரம் தவறு என்றால் சரியல்ல. 1ம் வாதி 7.3.2018 ல் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அதில் வாதியின் சகோதரிகள் திருமணத்திற்கு பின்பு வழக்கு சொத்திற்கு வரவே இல்லை என சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. வாதிகள் கேட்டுகொண்ட பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது )